செய்தி வெளியீடு எண்: 705 நாள்: 25.05.2024

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.05.2024) சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் தென்மேற்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–133க்குட்பட்ட டாக்டர் நாயர் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் ரூ.4.80 இலட்சம் மதிப்பில் 480 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல் தூர்வாரும் பணியினையும், வார்டு–132க்குட்பட்ட சுப்ரமணியன் நகரில் உள்ள மழைநீர் வடிகாலில் ரூ.1.20 இலட்சம் மதிப்பில் 685 மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல் தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலம், நங்கநல்லூர் முதல் பிரதான சாலை, கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ.58.97 கோடி மதிப்பில் 11.723 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், வேளச்சேரி பிரதான சாலையில் அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு உபரிநீர் வெளியேறுவதற்காக நீர்வள ஆதாரத் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் ரூ.57.70 கோடி மதிப்பில் பள்ளிக்கரணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளையும், பழைய மகாபலிபுரம் சாலை, ஒக்கியம் மடுவு பகுதியில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ், ரூ.25 கோடி மதிப்பில் ஒக்கியம் மடுவு கால்வாயினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.615 கோடி மதிப்பில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் நீலாங்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் கடற்கரையில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்கரை தூய்மைப்படுத்தும் பணியினை தலைமைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தூய்மைப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின் போது, தலைமைச் செயலாளர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளவும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அவ்வப்போதைய தகவல்களின் அடிப்படையில் தேவையான முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, தலைமைச் செயலாளர் அவர்கள் தாம்பரம் மாநகராட்சி, செம்பாக்கம் மண்டலம், சிட்லபாக்கம் பகுதியில் நீர் வளத்துறை சார்பில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிட்லபாக்கம் ஏரியின் புனரமைப்பு பணிகளை பார்வையிட்டு வனத்துறை, நீர் வளத்துறை மற்றும் தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகளுக்கு பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். மேலும் ஏரியின் மேம்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கினார்கள்.

தாம்பரம் மாநகராட்சி சார்பில் சிட்லபாக்கம் ஏரியில் ரூ. 32.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு திடலினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக செம்பாக்கம் மண்டலம், வார்டு 34–க்குட்பட்ட ஜட்ஜ் காலனி பகுதியில் மழைநீர் வடிகால்களில் வண்டல் தூர் வாரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, தாம்பரம் சானடோரியம், ஜட்ஜ் காலனி பகுதியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 464 படுக்கைகள் வசதியுடன் இயங்கி வரும் பணிபுரியும் பெண்களுக்கான தோழி மகளிர் தங்கும் விடுதியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு விடுதியில் தங்கியுள்ள மகளிரிடம் அவர்களின் நலன் குறித்து கேட்டறிந்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், இரும்புலியூர் ஏரியிலிருந்து முடிச்சூர் வரை ரூ.96.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் கட்டுமான பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணியை விரைந்து முடிக்க நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால்களில் வண்டல் தூர் வாரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், பொன்மார் ஊராட்சி, போலச்சேரி கிராமப் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் 2024–2025ன் கீழ் புதிய குளம் அமைக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்த பின் புதிய குளம் அமைக்கும்

பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களிடம் தலைமைச் செயலாளர் திரு சிவ்தாஸ்மீனா,இ.ஆ.ப., அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின்போது, கூடுதல் தலைமைச் செயலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை (பொ) கூடுதல் தலைமைச் செயலர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் (பொ) திரு.பி. செந்தில்குமார், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குனர் திரு.டி.ஜி.வினய், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர், திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) திரு.வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச.அருண்ராஜ்,இ.ஆ.ப., தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் திருமதி. ஆர்.அழகுமீனா,இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி. அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் செல்வி. அனாமிகா ரமேஷ்,இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in